தெய்வமகள்

பெரிய

# அரிச்சுவடி





124
1-55

OFFICE OF THE ... R OF BOOKS
8 - JAN 1955



...தைவேல் முதலியார்



...வமகள் விலாசம் பிரஸ்
சென்னை


விலை அணா


T6
O31 (1) N54
88973

சென்னை 600 008
88973

## தமிழ் மொழியில் கலந்து வழங்கும்

# வடமொழியின் எழுத்துக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஜ | ஸ | ஷ | ஹ | க்ஷ |
| ஜா | ஸா | ஷா | ஹா | க்ஷா |
| ஜி | ஸி | ஷி | ஹி | க்ஷி |
| ஜீ | ஸீ | ஷீ | ஹீ | க்ஷீ |
| ஜு | ஸு | ஷு | ஹு | க்ஷு |
| ஜூ | ஸூ | ஷூ | ஹூ | க்ஷூ |
| ஜெ | ஸெ | ஷெ | ஹெ | க்ஷெ |
| ஜே | ஸே | ஷே | ஹே | க்ஷே |
| ஜை | ஸை | ஷை | ஹை | க்ஷை |
| ஜொ | ஸொ | ஷொ | ஹொ | க்ஷொ |
| ஜோ | ஸோ | ஷோ | ஹோ | க்ஷோ |
| ஜௌ | ஸௌ | ஷௌ | ஹௌ | க்ஷௌ |
| ஜ் | ஸ் | ஷ் | ஹ் | க்ஷ் |

உ

# தெய்வமகள்

# பெரிய அரிச்சுவடி

பாலபோதம் ஆத்திசூடி
கொன்றைவேந்தன் கதாமஞ்சரி
நூதன நீதிவாக்கியெங்கள்
உலகநீதி அடங்கியது.



அமரம்பேடு. இரங்கசாமிமுதலியார் குமாரர்
அ. குழந்தைவேல் முதலியார்
தெய்வமகள் விலாசம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.
சென்னை
பதிப்புரிமை] 1954 [விலை அணா 4
நெ-24. தாண்டவராயப்பிள்ளை வீதி.

A B C D E F G H I
J K L M N O P
Q R S T U V
W X Y Z

a b c d e f g h i j k l
m n o p q r s t
u v w x y z

*A B C D E F G H*
*I J K L M N O*
*P Q R S T U*
*V W X Y Z*

*a b c d e f g h i j k*
*l m n o p q r s t*
*u v w x y z*

உ
கணபதி துணை

# பெரிய அரிச்சுவடி

ஹரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை.

விநாயகர் காப்பு

அகத்தியரைப் போற்றி யரிச்சுவடி தன்னைச்
செகத்திற்ப்ர காசமுடன் செப்ப-மிகுத்தெனக்கு
எல்லா வெழுத்து மெளிதாக வந்திடவே
வல்லான் கணபதியை வாழ்த்து.

## ஹரி நமோ த்து
## சிந்தம்

உயிரெழுத்துகள் - 12

அ ஆ இ ஈ உ ஊ எ
ஏ ஐ ஒ ஓ ஔ கூ ஃ

மெய்யெழுத்துகள்-18

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம்
ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

இங்கிலீஷ் எண்கள்

1 2 3 4 5 6 7 8 9 10 100

(ரிஜிஸ்டர் அறிவிப்பு) இந்த அரிச்சுவடியில் நூதன நீதிவாக்கியங்கள்சேர்த்து அச்சிட்டு காபிரைட்செய்யப் பட்டிருக்கிறது. இதனைப் பிறர் அச்சிடக்கூடாது எனத் தெரிவித்திருக்கிறேன். அ. குழந்தைவேல் முதலியார்.

உயிர் மெய்யெழுத்துகள்-18

# க ங ச ஞ ட ண த
# ந ப ம ய ர ல வ ழ
# ள் ற ன

வடமொழி எழுத்துகள்

# ஜ ஸ ஷ ஹ க்ஷ

# அ இ உ எ ஒ

இந்த ஐந்தும் குறில்.

# ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ

இந்த ஏழும் நெடில்.

# க ச ட த ப ற

இந்த ஆறும் வல்லினம்.

# ங ஞ ண ந ம ன

இந்த ஆறும் மெல்லினம்.

# ய ர ல வ ழ ள

இந்த ஆறும் இடையினம்.

| | | | |
|---|---|---|---|
| குறில் | அ | க | ங |
| நெடில் | ஆ | கா | ஙா |
| குறில் | இ | கி | ஙி |
| நெடில் | ஈ | கீ | ஙீ |
| குறில் | உ | கு | ஙு |
| நெடில் | ஊ | கூ | ஙூ |
| குறில் | எ | கெ | ஙெ |
| நெடில் | ஏ | கே | ஙே |
| நெடில் | ஐ | கை | ஙை |
| குறில் | ஒ | கொ | ஙொ |
| நெடில் | ஓ | கோ | ஙோ |
| நெடில் | ஔ | கௌ | ஙௌ |
| ஆய்தம் | ஃ | க் | ங் |

| | | | |
|---|---|---|---|
| ச | ஞ | ட | ண |
| சா | ஞா | டா | ணா |
| சி | ஞி | டி | ணி |
| சீ | ஞீ | டீ | ணீ |
| சு | ஞு | டு | ணு |
| சூ | ஞூ | டூ | ணூ |
| செ | ஞெ | டெ | ணெ |
| சே | ஞே | டே | ணே |
| சை | ஞை | டை | ணை |
| சொ | ஞொ | டொ | ணொ |
| சோ | ஞோ | டோ | ணோ |
| சௌ | ஞௌ | டௌ | ணௌ |
| ச் | ஞ் | ட் | ண் |

| | | | |
|---|---|---|---|
| த | ந | ப | ம |
| தா | நா | பா | மா |
| தி | நி | பி | மி |
| தீ | நீ | பீ | மீ |
| து | நு | பு | மு |
| தூ | நூ | பூ | மூ |
| தெ | நெ | பெ | மெ |
| தே | நே | பே | மே |
| தை | நை | பை | மை |
| தொ | நொ | பொ | மொ |
| தோ | நோ | போ | மோ |
| தௌ | நௌ | பௌ | மௌ |
| த் | ந் | ப் | ம் |

| | | | |
|---|---|---|---|
| ய | ர | ல | வ |
| யா | ரா | லா | வா |
| யி | ரி | லி | வி |
| யீ | ரீ | லீ | வீ |
| யு | ரு | லு | வு |
| யூ | ரூ | லூ | வூ |
| யெ | ரெ | லெ | வெ |
| யே | ரே | லே | வே |
| யை | ரை | லை | வை |
| யொ | ரொ | லொ | வொ |
| யோ | ரோ | லோ | வோ |
| யௌ | ரௌ | லௌ | வௌ |
| ய் | ர் | ல் | வ் |

| | | | |
|---|---|---|---|
| ழ | ள | ற | ன |
| ழா | ளா | றா | னா |
| ழி | ளி | றி | னி |
| ழீ | ளீ | றீ | னீ |
| ழு | ளு | று | னு |
| ழூ | ளூ | றூ | னூ |
| ழெ | ளெ | றெ | னெ |
| ழே | ளே | றே | னே |
| ழை | ளை | றை | னை |
| ழொ | ளொ | றொ | னொ |
| ழோ | ளோ | றோ | னோ |
| ழௌ | ளௌ | றௌ | னௌ |
| ழ் | ள் | ற் | ன் |

# இரண்டெழுத்து மொழிகள்

| | | |
|---|---|---|
| அரி | ஓலை | சிரை |
| அரை | ஓடு | சீலை |
| அடை | கண் | சுமை |
| அணை | கவி | சூது |
| ஆறு | கால் | செல் |
| ஆடை | காது | சேதி |
| இசை | கிளை | தாடி |
| இடி | கீல் | திரை |
| ஈடு | குறி | தேள் |
| ஈகை | கூர் | தொடு |
| உண் | கூழ் | நினை |
| உலை | கெதி | நீவா |
| ஊடு | கேடு | நூறு |
| ஊண் | கேள் | நெய் |
| எவை | கைதி | நேர் |
| எலி | கொடு | நொடி |
| ஏது | கோது | நோய் |
| ஏணி | கௌவு | பரி |
| ஐயா | சமை | பாடு |
| ஒரு | சார் | பிணை |

| | | |
|---|---|---|
| பீடை | போடு | மெது |
| புதை | மணி | மேனி |
| பூசை | மாடு | மொழி |
| பெண் | மிதி | வழி |
| பேதை | மீன் | வாது |
| பைசா | முறி | விடு |
| பொன் | மூளை | வேசி |

## மூன்றெழுத்து மொழிகள்

| | | |
|---|---|---|
| அரண் | காடன் | தீரன |
| ஆலம் | கிணறு | நலம் |
| இவன் | கீதம் | நாக்கு |
| ஈசன் | சண்டை | நிலுவை |
| உலகு | சாமம் | நீலம் |
| ஊத்தை | சிங்கு | பழம் |
| எங்கு | சீமான் | பாம்பு |
| ஏவல் | சுண்டு | பிண்டி |
| ஐயம் | சூலம் | பீடம் |
| ஒப்பு | தம்பி | மதம் |
| ஓணான் | தானன் | மானம் |
| கண்டி | திருடி | மிச்சை |

| | | |
|---|---|---|
| மீனன் | வஞ்சி | விதவை |
| மூச்சி | வாதன் | வீணன் |

## நான்கெழுத்து மொழிகள்

| | |
|---|---|
| அப்பம் | கிழவன் |
| ஆத்தாள் | கீர்த்தி |
| இடையன் | குயவன் |
| ஈசுரன் | கெந்தம் |
| உள்ளூர் | கைதவம் |
| ஊக்கம் | கொல்லன் |
| எறும்பு | சங்கம் |
| ஏங்கல் | சாக்காடு |
| ஐந்தூர் | சித்திரை |
| ஒட்டன் | தருமம் |
| ஓதுவார் | நயனம் |
| ஔவையார் | பரமன் |
| கண்ணன் | மதுரம் |
| காற்றூடி | வண்ணான் |

## தமிழ் மாதங்கள் 12

| | | | |
|---|---|---|---|
| சித்திரை | ஆடி | ஐப்பிசி | தை |
| வைகாசி | ஆவணி | கார்த்திகை | மாசி |
| ஆனி | புரட்டாசி | மார்கழி | பங்குனி |

# சிறு சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அகம் | அம்பு | ஆடு | ஆளு |
| அகழ் | அம்மா | ஆடை | ஆப்பு |
| அக்காள் | அம்மான் | ஆட்டை | ஆக்கல் |
| அக்குள் | அம்மி | ஆட்சி | இகம் |
| அங்கி | அம்மை | ஆட்டம் | இங்கி |
| அங்குசம் | அரம் | ஆட்டு | இங்கு |
| அசல் | அயம் | ஆணம் | இச்சை |
| அசை | அரன் | ஆணி | இடம் |
| அச்சம் | அரி | ஆணு | இடி |
| அஞ்சு | அரை | ஆணை | இடை |
| அடை | அலை | ஆண்டி | இண்டு |
| அட்டை | அலி | ஆண்டை | இண்டை |
| அட்டி | அவள் | ஆண்மை | இணை |
| அணா | அவன் | ஆதி | இதம் |
| அணி | அனம் | ஆத்தாள் | இது |
| அணு | அள்ளு | ஆந்தை | இம்மை |
| அணை | அறம் | ஆப்பு | இராகு |
| அண்டம் | அறை | ஆமை | இருள் |
| அண்டை | அனல் | ஆயம் | இலை |
| அண்ணன் | அணை | ஆயன் | இல்லை |
| அண்ணி | ஆகம் | ஆயாள் | இவள் |
| அதம் | ஆக்கை | ஆயி | இழை |
| அது | ஆசான் | ஆச்சி | இருல் |
| அத்தான் | ஆசை | ஆரம் | இறை |
| அத்தி | ஆஞான் | ஆரால் | இனம் |
| அப்பம் | ஆடம் | ஆரை | இனாம் |
| அப்பா | ஆடல் | ஆலம் | இன்பம் |
| அப்பி | ஆடி | ஆலை | இன்னா |

| | | | |
|---|---|---|---|
| இட்டை | ஊஞ்சல் | ஏப்பம் | ஓலை |
| இட்டம் | ஊத்தை | ஏய்ப்பு | ஔவை |
| இருப்பார் | ஊமை | ஏரி | கக்கம் |
| ஈகம் | ஊனம் | ஏரு | கக்கு |
| ஈகை | எங்கே | ஏனம் | கங்கு |
| ஈரம் | எச்சில் | ஐந்து | கசம் |
| ஈரல் | எடில் | ஐயம் | கச்சை |
| ஈச்சல் | எட்டு | ஐயா | கச்சா |
| ஈட்டி | எண்ணு | ஐயன் | கடல் |
| ஈனன் | எது | ஐயர் | கட்டை |
| உகம் | எத்தன் | ஒட்டன் | கட்டம் |
| உங்கள் | எத்து | ஒட்டு | கட்டி |
| உச்சம் | எய்த்து | ஒட்டை | கணை |
| உடல் | எரி | ஒண்டு | கண்டம் |
| உடை | எரு | ஒண்டை | கதிர் |
| உண்டை | எலி | ஒண்ணு | கதை |
| உணி | எல்லை | ஒப்பம் | கத்தி |
| உண்ணு | எல்லு | ஒப்பு | கத்தை |
| உதை | எல்லி | ஒன்று | கம்பம் |
| உப்பல் | எல்லன் | ஒன்றை | கம்மல் |
| உப்பு | ஏகம் | ஓசை | கயம் |
| உமி | ஏக்கல் | ஓஞ்சை | கரி |
| உயிர் | ஏங்கல் | ஓட்டம் | கரு |
| உரல் | ஏச்சு | ஓட்டான் | கரை |
| உறி | ஏடு | ஓட்டி | கர்த்தன் |
| உன்ன | ஏட்டில் | ஓட்டேன் | கர்ப்பன் |
| உன்னை | ஏணி | ஓட்டை | கலம் |
| ஊசல் | ஏணை | ஓணான் | கல்லன் |
| ஊசி | ஏது | ஓந்தி | கலன் |

| | | | |
|---|---|---|---|
| கலை | காளம் | குட்டி | கெதி |
| கல்லு | கானல் | குண்டம் | கெதை |
| கல்லான் | கிண்டம் | குண்டு | கெந்தம் |
| கல்லை | கிண்ணி | குதிர் | கெப்பை |
| கற்றை | கிலி | குத்தி | கெம்பு |
| கவி | கிழம் | குப்பம் | கெவி |
| கவை | கிழி | குமிழ் | கெட்டி |
| கழி | கிளா | கும்பல் | கேடு |
| கழூ | கிளி | கும்மி | கேட்டை |
| களி | கிளை | குரல் | கேணி |
| களை | கிள்ளு | குரு | கேது |
| காயம் | கிணு | குறில் | கேழ்வி |
| காசு | கின்னி | குன்று | கேள்வி |
| காஞ்சி | கின்னன் | கூசல் | கைவை |
| காடி | கின்னை | கூச்சு | கைதா |
| காடை | கீசான் | கூடு | கைதி |
| காட்சி | கீதம் | கூட்டாய் | கொக்கு |
| காணி | கீரை | கூட்டு | கொடி |
| காண்டம் | கீர்த்தி | கூத்தி | கொடை |
| காதம் | கீழோர் | கூலி | கொடு |
| காது | கீழ்மை | கூரை | கொத்து |
| காந்தல் | கீழல் | கூறல் | கொப்பு |
| காப்பு | கீறல் | கூனன் | கொம்பு |
| காமம் | கீற்று | கெங்கை | கொய்யா |
| காம்பு | குகை | கெசம் | கொள்ளு |
| காசி | குக்கல் | கெச்சை | கொலு |
| காய்ச்சல் | குச்சு | கெஞ்சல் | கொலை |
| காரை | குஞ்சு | கெடி | கொல்லு |
| காலம் | குடை | கெடு | கொள்ளை |

| | | | |
|---|---|---|---|
| கொசு | சன்னி | சாலம் | சீவில் |
| கொச்சை | சன்னம் | சாலி | சீனு |
| கோடு | சன்னல் | சாலை | சீனி |
| கோடி | சாகை | சாவி | சீனன் |
| கோடை | சாக்கு | சாறு | சுகம் |
| கோட்டி | சாடி | சிக்கு | சுகர் |
| கோணம் | சாடை | சிங்கம் | சுக்கல் |
| கோணி | சாட்டி | சிசு | சுக்கு |
| கோணு | சாட்டு | சித்தம் | சுங்கம் |
| கோதை | சாணம் | சித்தி | சுகி |
| கோந்தி | சாணுன் | சிந்து | சுடர் |
| கோபம் | சாணி | சிப்பாய் | சுட்டி |
| கோபி | சாணு | சிப்பி | சுனை |
| கோப்பு | சாணை | சிமிள் | சுண்டு |
| கோரம் | சாதா | சினை | சுண்டை |
| கோரை | சாதி | சீட்டு | சுண்டல் |
| கோர்வை | சாது | சீதா | சுத்தம் |
| கோலம் | சாந்தி | சீதை | சுத்தி |
| கோவை | சாந்தம் | சீந்தி | சுபம் |
| கோழி | சாபம் | சீந்தல் | சுப்பம் |
| கௌவை | சாப்பு | சீப்பி | சுப்பி |
| சரி | சாமம் | சீப்பு | சுமை |
| சலம் | சாமி | சீரில் | சுயம் |
| சலி | சாமை | சீயம் | சுரம் |
| சவம் | சாம்பல் | சீசை | சுரி |
| சள்ளு | சாயம் | சீரின் | சுரை |
| சன்னல் | சாயி | சீலம் | சுழி |
| சணி | சாரம் | சீலி | சுளி |
| சன்னு | சாரை | சீலை | சுள்ளு |

| | | | |
|---|---|---|---|
| சுளை | செவி | ஞானம | துக்கம் |
| சுரு | சேதி | ஞாயம் | துணை |
| சுனை | சேந்தல் | டப்பி | துண்டு |
| சுன்னம் | சேமம் | டப்பு | தூதன் |
| சூடம் | சேம்பு | டாப்பு | தூபம் |
| சூடல் | சேரி | டாலு | தூரம் |
| சூடு | சேர்வை | டேகை | தெங்கு |
| சூட்டி | சேனை | டேரா | தெப்பம் |
| சூட்டு | சேவல் | தக்கை | தெப்பல் |
| சூதம் | சேவை | தங்கம் | தெய்வம் |
| சூது | சைகை | தச்சன் | தெற்கு |
| சூரி | சைவம் | தடி | தேகம் |
| சூலம் | சைனம் | தணல் | தேக்கு |
| சூலி | சொகுசு | தண்டு | தேங்காய் |
| சூலை | சொக்கம் | தந்தி | தையல் |
| சூளை | சொத்து | தயிர் | தொகை |
| சூறை | சொந்தம் | தலை | தொங்கல் |
| செகம் | சொர்ணம் | தாங்கல் | தொட்டி |
| செக்கு | சொல்லு | தாங்கி | தொட்டு |
| செச்சை | சொற்கம் | தாதி | தொப்பு |
| செதிள் | சோகை | திகழ் | தொப்பை |
| செத்தை | சோதி | திக்கு | தோகை |
| செந்தில் | சோப்பர் | திங்கள் | தோட்டம் |
| செந்து | சோர்வு | திசை | தோண்டி |
| செபம் | சோலி | திடம் | நகம் |
| செப்பு | சோலை | திட்டு | நகல் |
| செம்பு | சோளம் | தீண்ட | நஞ்சு |
| செல்வம் | சோனை | தீபம் | நட்பு |
| சென்னி | சோபம் | துணி | நண்பு |

| | | | |
|---|---|---|---|
| நதி | நோக்கம் | புடேல் | மீதில் |
| நரி | நோன்பு | பூண்டு | முகில் |
| நன்றி | பகல் | பூதம் | முசல் |
| நாக்கு | பச்சை | பூமி | முட்ட |
| நாசி | பஞ்சு | பூரம் | முடம் |
| நாட்டம் | படி | பெட்டி | முண்டை |
| நாட்டு | படை | பெண்டிர் | மூங்கில் |
| நிசம் | பண்டம் | பெற்று | மெத்தை |
| நித்தம் | பண்ணை | பேச்சு | மெள்ள |
| நிலம் | பதம் | பேட்டை | மேகம் |
| நிலை | பந்து | பேடி | மேடு |
| நீங்கள் | பயம் | பேட்டி | மேடை |
| நீதி | பணி | பேயன் | மைந்தன் |
| நீலம் | பன்றி | பொடி | மொக்கு |
| நுங்கு | பாக்கு | பொட்டு | மோசம் |
| நுட்பம் | பாங்கு | பொதி | மௌனி |
| நூமல் | பாச்சல் | போகம் | யாகம் |
| நூற்று | பாலு | போர்க்கு | யானை |
| நூற்றை | பானை | போற்றி | யுகம் |
| நெஞ்சு | பானம் | மகள் | யுத்தம் |
| நெல்லு | பிச்சு | மகன் | யூதம் |
| நெற்றி | பிசகு | மக்கள் | யோகம் |
| நேசம் | பிசில் | மச்சம் | யோசனை |
| நேர்த்தி | பிசின் | மாசி | ரசம் |
| நைந்து | பிசை | மாடு | ரணம் |
| நைந்தல் | பீங்கான் | மாணி | ரதம் |
| நொக்கல் | புகழ் | மிக்க | ராகு |
| நொச்சி | புகை | மீசை | ராசி |
| நொள்ளை | புடம் | மீட்சி | ருசி |

| | | | |
|---|---|---|---|
| ரூபாய் | வங்கு | விசை | வீணை |
| ரெப்பை | வசி | விடில் | வீதி |
| ரேகை | வட்டு | விதி | வீரி |
| ரொட்டி | வட்டம் | வித்து | வெட்டு |
| ரோமம் | வந்து | விந்து | வெல்லு |
| லக்கு | வலி | விம்மி | வெள்ளை |
| லங்கை | வலை | வியர்வை | வெள்ளி |
| லஞ்சம் | வல்லி | விரல் | வென்று |
| லாந்தர் | வண்டு | விரி | வேங்கை |
| லாபம் | வண்ணி | விலை | வேடன் |
| லிங்கம் | வாது | விழி | வேட்டி |
| லீலை | வாழை | விள்ளு | வேணு |
| லுட்டு | வாசல் | வினை | வேந்தன் |
| லூட்டி | வாக்கு | வின்னி | வேலி |
| லேஞ்சி | வாந்தி | வீக்கம் | வேலு |
| லொங்கு | வாடி | வீசம் | வேனில் |
| லோலன் | வாடு | வீடு | வைப்பு |
| வகை | விக்கல் | வீட்டை | வையம் |
| வங்க | விச்சு | வீணில் | வைரம் |

## இங்கிலீஷ் மாதங்கள் 12

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | ஏப்ரல் | ஜூலை | அக்டோபர் |
| பிப்ரவரி | மே | ஆகஸ்டு | நவம்பர் |
| மார்ச்சு | ஜூன் | செப்டம்பர் | டிசம்பர் |

## தமிழ் வாரங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | செவ்வாய் | வியாழன் | சனி |
| திங்கள் | புதன் | வெள்ளி | ஆக-7. |

## இங்கிலீஷ் வாரங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஸன்டே | டியூஸ்டே | தர்ஸ்டே | ஸட்டர்டே |
| மண்டே | வெட்னஸ்டே | பிரைடே | ஆக-7. |

88973

# இருசொல் வாக்கியங்கள்

வட்டப் பாறை
வந்து செய்தான்
இராஜ நீதி
வாரா மாடு
பூலாக் கொம்பு
சொல்லச் சொன்னான்
கருடப் பட்சி
ஆலம் விதை
எதிர் காலம்
மூன்று கண்கள்
கதிர் காமம்
பொன் மயில்
வெள்ளித் தண்டை
என் செய்வான்
கெட்ட கேடு
சோம்பல் வேலை
சாந்த குணம்
கொண்ட மாடு
சீமைக் கப்பல்
பொன் கம்மல்
பசுங் கன்று
நுணாச் செடி
தூணிச் சோளம்
பனை மரம்
வல் லிடும்பன்
கொள்ளப் போனான்
நிகழ் காலம்
பொல்லாச் சீமை
வெள்ளைச் சட்டை
செய்தால் நன்று
கந்தைத் துணி
நச்சுவேலை
மச்சு வீடு
போவானேன்
உண்டு வளர்ந்தான்
கையிற் கொடு
ஆட்டைத் திருடி
ஓட்டப் போனான்
சாகுங் காலம்
பலா மரம்
களாச் செடி
பட்டி மாடு
கொத்த மல்லி
செல்லாப் பணம்
சிறு குளம்
சீட்டு எழுது
மெத்த யானை
பெருங் குளம்
வெந்த கொள்ளு
விட நாகம்
நல்ல குணம்
சின்ன பையன்
சுக்குத் தேரு
சின்ன பணம்
வாழைக் குலை
கப்ப மஞ்சள்
வெந்த சோறு
புகைக் கப்பல்
விளா மரம்
பாகற் கொடி
பாக்கு மரம்
தண்ணீர் மொள்ளு
சொம்பைத் துலக்கு
மயில் விசிறி

பிர்ம தேவன்
நல்ல பையன்
பாடம் படி
பச்சை ஓணன்
அரிசி மூட்டை
பரம சிவன்

## முச்சொல் வாக்கியங்கள்

ஒரு போல் முத்து
நீ சொல்லாப் பேச்சு
ஒரு கூர் வாள்
கொள்ளு தின்னு மாடு
நமது பொன் சட்டி
ஒரு நச்சுப் பல்லி
இந்த புற் சுமை
ஒரு பெரிய கோவில்
ஒரு காராம் பசு
ஒரு கற்பக விருட்சம்
அந்த தமிழ்ச் சொல்
ஒரு சிறு பையன்
அந்த சின்ன கன்று
இந்த ஏரி மடை
ஒரு கரை நிலம்
ஒரு வெள்ளைத் துணி
அந்த கெட்ட பையன்
இந்த மண் சுவர்
இந்த மழை காலம்
ஒரு கிழப் பசு
ஒரு நல்ல பெண்
ஒரு கெட்ட பையன்
ஒரு பொன் மயில்
ஒரு தகரப் பரி
ஒரு வெள்ளை யானை
ஒரு அன்ன வாகனம்
ஒரு வெள்ளி ரிஷபம்
ஒரு நல்ல சிங்கம்
ஒரு அழகான தேர்
ஒரு நல்ல அஸ்வம்
ஒரு அலங்கார விமானம்
ஒரு நந்த வனம்
அவர் ஊருக்குப்போனார்
அவர் இதைத் தந்தார்
நஞ்சு சேர்ந்த நீர்
குட்டி ஆட்டு மயிர்
கேட்டு மாளாக் கதை
அந்த பாரி ஆள்
வெகு கெட்ட நாய்
நல்ல தம்பி பார்
சொன்ன சொல்லை நம்பு
நீ அதைப் பாரு [தேன்
நான் அவனைப் பார்த்
நீ எங்கே போனாய்
பாய வாராப் புலி
இந்த ரண சூரன்
இந்த மரச் சன்னல்
ஒரு நாவல் மரம்
இரண்டு கூடை மணல்
இந்த கோழி முட்டை
அந்த நிறை படி
என் தாய் தந்தை
நீ இதைப் படி
நீர் அதைக் கேளும்

நான் என்ன செய்தேன்
நாம் அங்கே போவோம்
அவர் என்ன சொன்னார்
நமது பொன் கட்டி
அந்த மூடப் பையன்
சொல்லச் சொன்ன வார்த்
ஒரு சீந்திற் கொடி [தை
ஊரி லில்லாப் பொருள்
மேயப் போன பசு
மெத்த நல்ல வண்டி
ஒரு நொண்டி மாடு
நீ அங்கே போ
நீர் வந்து போம்
சிற்பி வேலை செய்தான்

தட்டான் நகைசெய்தான்
தச்சன் வேலைசெய்தான்
நீங்கள் பார்த்தீர் இதை
அவர் புஷ்பம் எடார்
சிவனை சிந்தை செய்
ஒரு கிழ மனிதன்
கேட்டு வந்து சொல்
அவன் எங்கே போனான்
இந்தக் கடன் சீட்டு
நான் அதைச்செய்வேன்
இந்தக் கெட்ட ஜன்னி
ஒரு வெள்ளைச் சாவல்
கால மல்லாக் காலம்
அவன் செய்த கதை

## நாற்சொல் வாக்கியங்கள்

நான் ஐந்துபணம்தந்தேன்
நீ ஒரு மனை கோலு
நீ நாலு மாடு வாங்கு
நீ அங்கே வந்து போ
நீ உன் பல்லைக் காட்டு
நீ ஆறு நாளில் வா
நீ உன் நாக்கைக் காட்டு
நீர்அவர்பெண்ணைக்கொண்
நீவந்தநாளைஎண்ணு [டாய்
அவர்மெத்தைமேல்போவா
நீ எங்கள் வீட்டைப்பார் [ர்
அது ஏன் அங்கே போச்சு
நீ அதில் வைத்து வை
நீ அந்தத் தேரை ஓட்டு
நீ ஏன் அங்கே வந்தாய்
அவன்ஒரு கெட்டபிள்ளை

நான்என்தேசம்போனேன்
அவள்மூன்றுகாசுதந்தாள்
நீ சுவர் மேலே ஏறு
நீ இதன் மேலே யிரு
நீர் எந்த வழி வந்தீர்
நீர் ஒரு யுக்தி பண்ணு
நீ ஏன் பொய்சொன்னாய்
நாம் நமது ஊருக்குப்போ
வோம் [போம்
நாங்கள் ஒரு ராகங் கேட்
நீ ஒரு குட்டை வாங்கு
நீ உனது காலைப் பார்
நான் ஒரு காசு தந்தேன்
அதை அவன் கையிற்
கொடு [ர்த்தான்
அவன் இதை நன்றாய்ப்பா

நீர் ஒரு நாய் வாங்கும்
நான் அதை என் செய்க
அவன் இதைப் பார்த்து வந்தான்
நீ அதை நன்றாய்ப் படி
நீ அவன் பின்னால் போ
உன்னை அவன் என்ன செய்தான்
இராமா அங்கே போயிரு
இராமன் இங்கே வந்து போனான்
ஒரு சேர் நெய் வார்ப்பாய்
நீ அவன் கையிற் சாவாய்
நீ ஒரு வாழை வை
நீநேற்று என்னசெய்தாய்
நீ ஏன் காட்டிற் போனாய்
அவன்ஒருநல்லபிள்ளை [டும்
நான்தெற்கே போகவேண்

ஒரு மணிக்கு அறுபது நிமிஷம்
ஒரு நாளைக்கு 24-மணி
ஒருவாரத்திற்கு 7-நாள்
ஒருபட்சத்திற்கு 15-நாள்
ஒரு மாதத்திற்கு 30-நாள்
ஒரு வருடத்திற்கு 12-மாதம்
இரண்டு மாதங் கொண்டது ருது
ஆறு மாதங் கொண்டது அயனம்
உத்தராயனம் தட்சணாயனம்என்பனஅயனங்கள்
இரண்டு அயனங் கொண்டது வருஷம் [ரம்
வருடமொன்றிற்கு52-வா
வருடம்ஒன்றிற்கு365நாள்

## ஐஞ்சொல் வாக்கியங்கள்

அவன் அதைப்பற்றி என்னைக் கேட்டான்
நீ அங்கே ஏன் வரவில்லை
நீ அதை உன் கண்ணால் பார்
நான் இதை அவன் கையில் கொண்டேன்
உன் தாய் சொல்லைக் கவனமாய்க் கேள்
நீ நல்லோர் சொல்லைக் கேட்டால் வாழ்வாய்
நீ கீழோர் புத்தியைக் கேட்க வேண்டாம்
நான் நேற்று உன்னண்டை வந்தேன்
அவன் உன்னைப்பற்றி சிலது சொன்னான்
கந்தன் உன்னை நேற்று என்ன கேட்டான்
நீ உன் பாடத்தை நன்றாய்ப் படி
அரங்க னண்டை உன் பாடம் ஒப்பி
நீ ஐயரண்டை ஏன் போனாய்

நீ ஏன் நேற்று வரவில்லை
நீ என்னைப் பார்த்து என்ன சொன்னாய்
நீ அதை நன்றாய் உற்றுப் பார்
நீ இனி மெத்தப் பேச வேண்டாம்
இனி இதை விட்டு அங்கே போ
நீ என் முன்னே ஓடி வந்தாய்
நீ தினந்தோறும் காலையில் கடவுளை வணங்கு
பாடம் படிக்கையில் சந்தேக மில்லாமற் படி
தாய் தந்தையர்க்கும் உபாத்தியாயர்க்கும் அடங்கி நட
காலந் தவறாமல் பாடசாலைக்குப் போக முயல்
உன் துணிகளைத் தோய்த்துச் சுத்தமாக உடுத்து
கெட்டவன் என்று ஒருவருஞ் சொல்லாமல் நட
கிடைக்காத பொருளை யெண்ணி மனம் வருந்தாதே
உனக்குக் கிடைத்த பொருளில் திருப்தியாய்இரு

# வேடிக்கைக் கதைகள்

1. காசியில் ஒரு வித்வான் வாசஞ் செய்தான் அவனுக்கிரண்டுபிள்ளைகளுண்டு. அவ்விருவரில் மூத்தவனுக்குத் தன் ஆஸ்தியெல்லாங்கொடுத்துவிட்டு இளையவனுக்குக் கல்வி சாஸ்திரங்களைக் கற்பித்தான். மூத்தவன் சிலநாளில் தன் பணத்தையெல்லாஞ் செலவழித்து ஏழையானான். இளையவனோ தன் சாமர்த்தியத்தினால் மிகுந்த திரவியம் சம்பாதித்துச் சுகமாக வாழ்ந்திருந்தான். ஆதலால் கல்வியைக் கற்றவன் சுகப்படுவான்.

2. ஒரு தேள் நெருப்பில் விழுவதை ஒருவன் பார்த்து அதனைக் காப்பாற்றுகிறதே தருமமாகவிருக்குமென்று யோசனைசெய்து அதனை விழவொட்டாமல் காப்பாற்றினான். ஆனால் அத்தேள் அவன் செய்த உபகாரத்தை மறந்து அவன் கையிற் கொட்டி மிகவும் நோயை யுண்டாக்கிற்று. ஆதலால் துன்மார்க்கருக்கு நாம் எப்படி உபகாரஞ் செய்கிறதென்று எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

ஔவையா ரருளிச்செய்த

# ஆத்திசூடி மூலம்

## காப்பு

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
ஏததி யேத்தித் தொழுவோ மியாமே.

அறஞ்செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண்ணெழுத் திகழேல்
ஏற்ப திகழ்ச்சி
ஐய மிட்டுண்
ஒப்புர வொழுகு
ஓதுவ தொழியேல்
ஔவியம் பேசேல்
அஃகஞ் சுருக்கேல்
கண்டொன்று சொல்லேல்
ஙப்போல் வளை
சனி நீராடு
ஞயம்பட வுரை
இடம்பட வீடிடேல்
இணக்க மறிந்திணங்கு
தந்தை தாய்ப்பேண்
நன்றி மறவேல்
பருவத்தே பயிர்செய்
மண்பறித் துண்ணேல்
இயல்பலாதன செயேல்
அரவ மாட்டேல்
இலவம் பஞ்சிற் றுயில்
வஞ்சகம் பேசேல்
அழகலாதன செயேல்
இளமையிற் கல்
அறனை மறவேல்
அனந்த லாடேல்
கடிவது மற
காப்பது விரதம்
கிழமைப் படவாழ்
கீழ்மை யகற்று
குணமது கைவிடேல்
கூடிப் பிரியேல்
கெடுப்ப தொழி
கேள்வி முயல்
கைவினை கரவேல்
கொள்ளை விரும்பேல்
கோதாட் டொழி
சக்கர நெறிநில்
சான்றோ ரினத்திரு
சித்திரம் பேசேல்
சீர்மை மறவேல்
சுளிக்கச் சொல்லேல்
சூது விரும்பேல்
செய்வன திருந்தச்செய்
சேரிட மறிந்துசேர்
சையெனத் திரியேல்
சொற்சோர்வு படேல்
சோம்பித் திரியேல்
தக்கோ னெனத்திரி
தானமது விரும்பு
திருமாலுக் கடிமைசெய்

தீவினை யகற்று
துன்பத்திற் கிடங்கொடேல்
தூக்கி வினைசெய்
தெய்வ மிகழேல்
தேசத்தோ டொத்துவாழ்
தையல்சொற் கேளேல்
தொன்மை மறவேல்
தோற்பன தொடரேல்
நன்மை கடைப்பிடி
நாடொப் பனசெய்
நிலையிற் பிரியேல்
நீர்விளை யாடேல்
நுண்மை நுகரேல்
நூற் பலகல்
நெற்பயிர் விளை
நேர்பட வொழுகு
நைவன நணுகேல்
நொய்ய வுரையேல்
நோய்க்கிடங்கொடேல்
பழிப்பன பகரேல்
பாம்பொடு பழகேல்
பிழைபடச் சொல்லேல்
பீடு பெறநில்
புகழ்ந்தாரைப் போற்றிவாழ்
பூமி திருத்தியுண்
பெரியாரைத் துணைகொள்
பேதைமை யகற்று
பையலோடிணங்கேல்
பொருடனைப் போற்றிவாழ்
போர்த்தொழில்புரியேல்
மனந் தடுமாறேல்
மாற்றானுக் கிடங்கொடேல்
மிகைபடச் சொல்லேல்
மீதூண் விரும்பேல்
முனைமுகத்து நில்லேல்
மூர்க்கரோ டிணங்கேல்
மெல்லியா டோள்சேர்
மேன்மக்கள்சொற்கேள்
மைவிழியார் மனையகல்
மொழிவ தறமொழி
மோகத்தை முனி
வல்லமை பேசேல்
வாதுமுற் கூறேல்
வித்தை விரும்பு
வீடு பெறநில்
உத்தம னாயிரு
ஊருடன் கூடிவாழ்
வெட்டெனப் பேசேல்
வேண்டி வினைசெயேல்
வைகறைத் துயிலெழு
ஒன்னாரைச் சேரேல்
ஓரஞ் சொல்லேல்

# கொன்றைவேந்தன் மூலம்

கொன்றை வேந்தன் செல்வ னடியிணை
என்று மேத்தித் தொழுவோ மியாமே.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயந் தொழுவது சாலவும் நன்று

இல்லற மல்லது நல்லற மன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்
ஏவா மக்கண் மூவா மருந்து
ஐயம் புகினுஞ் செய்வன செய்
ஒருவனைப் பற்றி யோரகத் திரு
ஓதலி நன்றே வேதியர்க் கொழுக்கம்
ஔவியம் பேசுத லாக்கத்திற் கழிவு
அஃகமுங் காசுஞ் சிக்கெனத் தேடு
கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை
காவ னானே பாவையர்க் கழகு
கிட்டா தாயின் வெட்டென மற
கீழோ ராயினுந் தாழ வுரை
குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை
கூரம் பாயினும் வீரியம் பேசேல்
கெடுவது செய்யின் விடுவது கருமம்
கேட்டி லுறுதி கூட்டு முடைமை
கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி
கொற்றவ னரித லுற்றிடத் துதவி
கோட்செவிக் குறளை காற்றுட னெருப்பு
கௌவைச் சொல்லி னெவ்வருக்கும் பகை
சந்ததிக் கழகு வந்தி செய்யாமை
சான்றோ ரென்கை யீன்றோர்க் கழகு
சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு
சீரைத் தேடி யேரைத் தேடு
சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்
சூதும் வாதும் வேதனை செய்யும்
செய்தவ மறந்தாற் கைதவ மாளும்
சேமம் புகினுஞ் சாமத் துறங்கு
சையொத் திருந்தா லைய மிட்டுண்
சொக்க ரென்பவ ரத்தம் பெறுவர்

சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்
தந்தைசொன் மிக்க மந்திர மில்லை
தாய்சொற் றுறந்தால் வாசக மில்லை
திரைகட லோடியுந் திரவியந் தேடு
தீராக் கோபம் போராய் முடியும்
துடியாப் பெண்டிர் மடியி னெருப்பு
தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
தெய்வஞ் சீறிற் கைதவ மாளும்
தேடா தழிக்கிற் பாடாய் முடியும்
தையும் மாசியும் வையகத் துறங்கு
தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது
தோழ னோடு மேழைமை பேசேல்
நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்
நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை
நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை
நீரகம் பொருந்திய வூரகத் திரு
நுண்ணிய கருமமு மெண்ணித் துணி
நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு
நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை
நேரா நோன்பு சீரா காது
நைபவ ரெனினும் நொய்ய வுரையேல்
நொய்பவ ரென்பவர் வெய்யவ ராவர்
நோன் பென்பது கொன்று தின்னாமை
பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்
பாலோ டாயினுங் கால மறிந்துண்
பிறன்மனை புகாமை யறமெனத் தகும்
பீரம் பேணிற் பாரந் தாங்கும்
புலையுங் கொலையுங் களவுந் தவிர்
பூரியோர்க் கில்லை சீரிய வொழுக்கம்
பெற்றோர்க் கில்லை சுற்றமுஞ் சினமும்
பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்
பையச் சென்றால் வையந் தாங்கும்
பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்

மீபானக மென்பது தானுழந் துண்டல்
மருந்தே யாயினும் விருந்தோ டுண்
மாரி யல்லது காரிய மில்லை
மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
மீகாம னில்லா மரக்கல மோடாது
முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்
மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்
மெத்தெனப் படுத்தல் நித்திரைக் கழகு
மேழிச் செல்வங் கோழை படாது
மைவிழி யாடனைக் கையகன் றொழுகு
மொழிவது மறக்கி னழிவது கருமம்
மோன மென்பது ஞான வரம்பு
வளவ னாயினு மளவறிந் தழித்துண்
வானஞ் சுருங்கிற் றானஞ் சுருங்கும்
விருந்திலோர்க் கில்லை பொருந்திய வொழுக்கம்
வீரன் கேண்மை கூரம் பாகும்
உறவோ ரென்கை யிரவா திருத்தல்
ஊக்க முடைமை யாக்கத்திற் கழகு
வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை
வேந்தன் சீறி னாந்துணை யில்லை
வையந் தோறுந் தெய்வந் தொழு
ஒத்த விடத்து நித்திரை கொள்
ஓதாதார்க் கில்லை யுணர்வொடு வொழுக்கம்

**வித்வான் சிவப்பிரகாசையர் அவர்கள் இயற்றிய**

# நூதன நீதிவாக்கியங்கள்

**கணபதி வணக்கம்**

பொற்புறு நீதிச்சொல் புனைதற்குச் சென்னைநகர்
கற்பக விநாயகர்தாள் காப்பு.

அல்லும் பகலும் அன்னையை வணங்கு
ஆற்றங் கரையூர் ஆபத்துக் கிடம்
இச்சகம் பேசுவோ ரீனரே யாவர்
ஈசன் திருவடி நேசம் விடாதே

உண்டவர் வீட்டிற் கிரண்டகம் புரியேல்
ஊனுடைப் பொருளை யுண்ணத் தகா
எந்நாட் டவர்க்கு மினிதினிற் கொடு
ஏளனஞ் செய்ய யிடந்தரா திரு
ஐயகோ செல்வ மழிதல் அதிசயமே
ஒழுக்கந் தவிர ஒண்ணு தென்றறி
ஓவிய மென்ன உடல மடங்கு
ஒளவியம் பேச லறச்செய லன்றே
கற்றவ ரடைவர் கனமும் புகழும்
சனன மரணஞ் சாகர மாகும்
தருமமே யென்றுந் தலையினைக் காக்கும்
தாரக மந்திர மோமெனப் படுமே
நமனுக் கஞ்சி நடப்பது கடமை
பரம சிவனைப் பணிகுவாய் மனமே
பாதிரி மலரின் பரிமள மில்லை
இயலிசை நாடக மெனுமிவை முத்தமிழ்
அரகர சிவவென வரனைத் துதிசெய்
உலகம் பழிக்க உடம்பெடுக் காதே
உழவுத் தொழிலே யுயர்ந்த தாகும்
களவுங் கைத்தும் கைவிட வேண்டும்
கறங்கெனத் திரிவதிற் காரிய மில்லை
கனமுந் தனமுங் கண்ணியந் தரும்.

## வேறு

| | |
|---|---|
| கல்வியே கைப்பொருள் | படித்ததையே படி |
| கற்றவர்க்கே கனம் | பாடம் வரச்செய் |
| நகர வருக்கம் | மணமலர் மாட்சி |
| சாத்திரம் சமுத்திரம் | மாமனுரைப் பணி |
| சாமத் துறங்கு | வளம்பட வாழ்க |
| ஞான நூற்படி | வாத்தியார் சொற்கேள் |
| தமிழ்ப்பொரு ளினிமை | விநயமாய்ப் பேசு |
| தாரணமே தகும் | வீணரைச் சேராதே |
| நன்றிக் கெதிரிலை | உளவினைச் சொல்லேல் |
| நாவலர் சிறந்தவர் | இனம்விட் டகலேல் |

# வாசக பாடங்கள்

1. அப்பா சிதம்பரம், நீ ஈ-பாச்சி-வண்டு-ஓணன்-கிளி - பல்லி - முதலான சீவவதை செய்யவேண்டாம் ஏனென்றால், உன் கையில் காயம் பட்டால் என்னமாய் நோகும் என்பதை நீ யோசித்துப் பார்.

2. ஒருநாள் கந்தன் கடாமாட்டின் மேலே ஏறிச் சவாரி விட்டான். அது துள்ளியோட அவன் கீழே விழுந்தான். அதனால் அவனுடைய பற்களெல்லாம் விழுந்து அவனுக்கு அதிககாயம் பட்டது; மெத்த வருத்தப்பட்டான். ஆகையால் நீ இனி எந்த மாட்டின் மீதும் ஏறவேண்டாம்.

3. ஒரு மட்டிப் பையன் ஒரு நண்டு வளையைப் பார்த்து அதில் அவன் கையை விட்டான் அதிலிருந்த நாகம் அந்தப் பையன் கையில் தீண்ட அதின் விஷம் அவன் தலை மண்டையிலேறி அந்தப் பையன் செத்தான். ஆகையால், அப்பா நீ இனி ஒரு வளையைக் கண்டால் அதில் உன் கையை விடவேண்டாம், கையிட்டால் உயிர்ச்சேதம் வரும்.

4. செங்கன் என்று ஒரு பையன் ஒரு தோட்ட வேலியைத் தாண்டிப் போனான். அங்கே ஒரு முள் அவன் காலில் தைத்து காயம்பட்டு இரத்தமாகி அவன் தன் வீட்டில் வந்தான். அந்த காயம் சீலை ஓடி அவன் மெத்த வருத்தப்பட்டான். அப்பா நாமும் நல்ல வழி விட்டு வேலி தாண்டிப்போனால் அந்த வருத்தம் நாமும் படவேண்டி வரும்

5. தம்பி ஆறுமுகம், நீ இன்றுமுதல் இந்த அம்பும் வில்லும் கையில் தொடவேண்டாம். ஏனென்றால், நீ ஒன்றின்மேலே ஒரு அம்பை எய்யும்போது, அது தப்பி ஒரு ஆளின்பேரில் பட்டால், அவன் உயிர் போகும். அதை நமது இராஜா கேட்டால் உன்னைத் தூக்கிலே போட்டுக் கொல்லவேண்டி வரும்.

# உலகநீதி

## காப்பு

உலகநீதிப் புராணத்தை யுரைக்கவே
கலைகளாய்வருங் கரிமுகவன் காப்பு.

ஓதாமலொருநாளு மிருக்கவேண்டாம்
ஒருவரையும்பொல்லாங்கு சொல்லவேண்டாம்
மாதாவையொருநாளு மறக்கவேண்டாம்
வஞ்சனைகள்செய்வாரோ டிணங்கவேண்டாம்
போகாதவிடந்தனிலே போகவேண்டாம்
போகவிட்டுப்புறஞ்சொல்லித் திரியவேண்டாம்
வாதாடுங்குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமானை வாழ்த்தாய்நெஞ்சே. 1

நெஞ்சாரப்பொய்தன்னைச் சொல்லவேண்டாம்
நிலையில்லாக்காரியத்தை நிறுத்தவேண்டாம்
நஞ்சுடனேயொருநாளும் பழகவேண்டாம்
நல்லிணக்கமல்லாரோ டிணங்கவேண்டாம்
அஞ்சாமற்றனிவழியே போகவேண்டாம்
அடுத்தவரையொருநாளுங் கெடுக்கவேண்டாம்
மஞ்சாருங்குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமானை வாழ்த்தாய்நெஞ்சே. 2

மனம்போனபோக்கெல்லாம் போகவேண்டாம்
மாற்றானையுறவென்று நம்பவேண்டாம்
தனந்தேடியுண்ணாமற் புதைக்கவேண்டாம்
தருமத்தையொருநாளும் மறக்கவேண்டாம்
சினந்தேடியல்லலையுந் தேடவேண்டாம்
சினத்திருந்தால்வாசல்வழி சேரவேண்டாம்
மனந்தேடுங்குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமானை வாழ்த்தாய்நெஞ்சே. 3

குற்றமொன்றும்பாராட்டித் திரியவேண்டாம்
கொலைகளவுசெய்வாரோ டிணங்கவேண்டாம்
கற்றவரையொருநாளும் பழிக்கவேண்டாம்
கற்புடையமங்கையரைக் கருதவேண்டாம்

கொற்றவனோடெதிர்மாறு பேசவேண்டாம்
கோயிலில்லாவூரில் குடியிருக்கவேண்டாம்
மற்றுநிகரொவ்வாத வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமானை வாழ்த்தாய்நெஞ்சே. 4

வாழாமற்பெண்ணை வைத்துத் திரியவேண்டாம்
மனையாளைக்குற்றமொன்றுஞ் சொல்லவேண்டாம்
வீழாதபடுகுழியில் வீழவேண்டாம்
வெஞ்சமரிற்புறங்கொடுத்து மீளவேண்டாம்
தாழ்வானகுலத்துடனே சேரவேண்டாம்
தாழ்ந்தவரைப்பொல்லாங்குச் சொல்லவேண்டாம்
வாழ்வாருங்குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமானை வாழ்த்தாய்நெஞ்சே. 5

வார்த்தைசொல்வார்வாய்பார்த்துத்திரியவேண்டாம்
மதியாதார்தலைவாசல் மிதிக்கவேண்டாம்
மூத்தோர்சொல்வார்த்தைதனை மறக்கவேண்டாம்
முன்கோபக்காரரோ டிணங்கவேண்டாம்
வாத்தியார்கூலியை வைத்திருக்கவேண்டாம்
வழிபறித்துத்திரிவாரோ டிணங்கவேண்டாம்
சேர்ந்தபுகழானதொரு வள்ளிபங்கன்
திருக்கைவேலாயுதனைச் செப்பாய்நெஞ்சே. 6

கருதாமற்கருமங்கள் முடிக்கவேண்டாம்
கணக்கழிவையொருநாளும் பேசவேண்டாம்
பொருவார்தம்போர்க்களத்தில் போகவேண்டாம்
பொதுநிலத்திலொருநாளு மிருக்கவேண்டாம்
இருதாரமொருநாளுந் தேடவேண்டாம்
எளியாரைஎதிரிட்டுக் கொள்ளவேண்டாம்
குருகாரும்புனங்காக்கும் ஏழைபங்கன்
குமரவேள்பாதத்தைக் கூறாய்நெஞ்சே. 7

சேராதவிடந்தனிலே சேரவேண்டாம்
செய்தநன்றியொருநாளு மறக்கவேண்டாம்
ஊரோடுங்குண்டுணியாய்த் திரியவேண்டாம்

88973

உற்றாரையுதாசினங்கள் சொல்லவேண்டாம்
பேரானகாரியத்தைத் தவிர்க்கவேண்டாம்
பிணைபட்டுத்துணைபோய்நீ திரியவேண்டாம்
வாதாடுங்குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமாளை வாழ்த்தாய்நெஞ்சே. 8
மண்ணினின்று பெண்ணோரம்சொல்லவேண்ட
மனஞ்சலித்துதிடுக்கிட்டுத் திரியவேண்டாம்
கண்ணழிவுசெய்துதுயர் காட்டவேண்டாம்
காணாதவார்த்தைதனை கட்டுரைக்கவேண்டாம்
புண்படவேவார்த்தைதனை சொல்லவேண்டாம்
புறஞ்சொல்லித்திரிவாரோ டிணங்கவேண்டாம்
மண்ணளந்தார்மருமகனார் மைந்தனெங்கோன்
மயிலேறும்பெருமாளை வாழ்த்தாய்நெஞ்சே. 9
புறம்பேசித்திரிவாரோ டிணங்கவேண்டாம்
வாதாடிவழக்குரைத்துச் செல்லவேண்டாம்
திறம்பேசிக்கலகமிட்டுத் திரியவேண்டாம்
தெய்வத்தையொருநாளு மறக்கவேண்டாம்
இறந்தாலும்பொய்தன்னைச் சொல்லவேண்டாம்
ஏசலிட்டவுற்றாரை நத்தவேண்டாம்
குறந்தனிலேவாழ்கின்ற வள்ளிபங்கன்
குமரவேளுமத்தைக் கூறாய்நெஞ்சே. 10
ஆதரித்துப்பலவகையாய்ப் பொருளுந்தேடி
யருந்தமிழாலறுமுகனைப் பாடவேண்டி
ஓதுவித்தவாசகத்தா லுலகநாதன்
உண்மையாய்ப்பாடிவைத்த உலகநீதி
காதலித்துக்கற்றோருங் கேட்டபேரும்
கருத்துடனேநாள்தோறுங் களிப்பினோடு
போதமுற்றுமிகவாழ்ந்து பொருளுந்தேடி
பூலோகமுள்ளளவும் வாழ்வார்தாமே. 11

உலகநீதி முற்றிற்று.

தெய்வமகள் விலாச அச்சகம் சென்னை-1.